
# மானுடம்

சிற்றிதழ் - 8



ஆசிரியர்
திருமலை சுந்தா

20/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகம் குறைந்தால்
ஐந்தும் குறையும்.

அட்டைப்படம் : சிசு



நேர்மை – பொறுமை
மானுட நேயம்

மானுடம்

172, பிரதான வீதி, திருக்கோணமலை

சிற்றிதழ் – 8
2009 – ஆவணி

இதழில்....

- மெய்ப் பொருள்
- மழை சில குறிப்புகள்
- கை வைத்தியம்
- சொல்லத்தான் நினைக்கிறேன்
- தமிழின் முதல் மூன்று நாவல்கள்
- எச்சில் தட்டு

ஆக்கங்களுக்கு படைப்பாளிகளே பொறுப்பு



# ஆசிரியரின்....

மானுடம் சிற்றிதழ்:8 உங்கள் கரங்களில் இருந்து கண்களை குளிர் விப்பது எங்களுக்கு தெரிகின்றது.

'கவிஞர் தாமரைத்தீவானின்' ஆக்கங்கள் தொடர்ந்து வெளிவரும்.

'கவிதாபாரதி'யின் மழை சில குறிப்புகள் உங்கள் சிந்தனைக்கு.

சி.சு. செல்லப்பா அவர்களின் 'தமிழின் முதல் மூன்று நாவல்கள்' பற்றி குறிப்புகள் பாதுகாக்கப்பட வேண்டியவை. ஆவணப்படுத்தி உள்ளோம்.

அடுத்த சிற்றிதழ் வரும் வரை உங்கள் உள்ளத்துக்குள் இருப்போம். நேரில் பேசுவோம். கருத்துக்களை பரிமாறிக் கொள்வோம்.

அச்சு: அஸ்ரா பிரின்டர்ஸ்
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்ப்பொருள்?

- கவிஞர்: தாமரைத்தீவான்



தப்பி ஒட்டிக் கிடக்கின்ற
தமிழ் எழுத்தாளர் நாம்
எப்படி எம் இலக்கியத்தை
இனி வளர்க்கப் போகின்றோம்?
இலக்கெதுவோ – நோக்கெதுவோ?
இன–மொழி–மண் பற்றெல்லாம்
விலக்கி விட்டு வெளியேறி
விண்ணில் ஒரு புவிக்கோளில்
உலவித் திரிந்துழலும்
ஒரு 'மனிதகுல' த்தினது
நலத்தினையும் தீங்கினையும்
நல்லபடி ஆய்வுசெய்து
கவி யாக்கி – பாட்டாக்கி
கதையாக்கி – கூத்தாக்கி
குவித்துக் கிடப்போமா?
கொள்ளுதற்கு வருவாரரா?
வீரம் மறைந் தொழிந்து
வெறுங் காதல் மட்டுமுள்ள
நேரம் இது – பன்னாட்கள்
நீடித்து நின்றிடுமா?
ஆழமின்றிச் சிந்தித்து
அழுத்தாமல் யாதொன்றும்
வாழும் உண வுடைக்கு
வழிகாட்டும் தொழிலாற்றி
போன தெலாம் மறந்தே
புதிதாய்ப் பிறந்தவர் போல்
மானத்தைப் பாராமல்
'மனிதம்' தனைப் பார்த்து
உயிர் காத் துடல் காத்து
ஒப்பாரி வையாமல்

பயிர், வானம் பார்ப்பது போல்
பார்த்தபடி கோல் பிடித்து
பழுது வரா வண்ணம்
பலபேர்க்கும் ஏற்றபடி
எழுதிக் குவிப்போமா?
இள–முதியோர் ஏற்பாரா?
ஆலும், அறுகும் போல்
அறம் கூறும் முப்பாலாம்
நாலும் போல் வாழ்ந்திடுமா?
நுவல்வீரா மெய்ப்பொருளை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை - சில குறிப்புகள்



நாட்காட்டிகள் திறைத்திறை
இங்கே குடை பூத்த மழை நாட்கள்

நமக்கென ஒரு சின்னப்புன்னகை தராத
மனிதர்களின் நடுவே தன்னந்தனியே
வாழ்க்கைப் போராட்டத்தில் வாள் சுழற்றிக் கொண்டிருக்கையில்
பிறந்த மண்ணின் ஞாபகம் சுமந்து வந்து
ஆறுதல் போர்த்துகிறது மழை

ரொம்பவும் பிடித்தமானவரோடு பேசிக் கொண்டிருப்பது போன்றது
மழையில் நனையும் கணங்கள்
இல்லாத நேரத்தில் வந்து
அழைப்பு கொடுத்துவிட்டுப் போய்விட்ட நண்பனைப் போல
அறியாத நள்ளிரவில் வந்து ஈரம் மட்டும் மிச்சம் செய்துவிட்டு
போய்விடுகிறது மழையும்

செல்லமாய்ச் சிணுங்கும்
தொணதொணப்பாய் சலிக்காமல் பேசும்
ஓங்கி அழுவது போல வேகம் கொண்டு பொழியும்
போகிற போக்கில் விடை சொல்லிப் போவது போல்
அவசரமாய் துளிகள் உதிர்த்துக் கடந்து போகும்
எந்த நிலையிலும் மழையும் ஒரு செல்லக் குழந்தைதான்
குழந்தைகள் வாழ்க!



என் வீட்டு
ரோஜா செடிகள்
அனாதையாகி விட்டன
நீ இல்லாத தனிமை!!

-வி.எம்.ஜெயந்தன், நேர்



நனைவதற்கு
நானும்
நனைப்பதற்கு
நீயும்
இருந்தபோது
இதமாய்
பொழிந்த மழை
இன்று
இருவரும் பிரிந்து
இரு வேறு திசையான பி
கோபத்தில் என் மீது
கல்லடிக்கிறது!
ஆனாலும்
ஆலங்கட்டி மழையென்று
ஆறுதல் சொல்கிறது மன

-டி.ஆர்.ஜெட்சன் ஜெய
நாகர்கோவில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கை வைத்தியம்

### ❋ அத்திப்பட்டை:

அத்திப்பட்டை பெண்களுக்கு ஏற்படும் உதிரப்போக்கு போன்ற கோளாறுகளுக்கு நல்ல மருந்து. அத்திப்பட்டையை மோர்விட்டு நன்றாக இடிக்க வேண்டும். பிறகு அதைப் பிசைந்து பிழிந்து வரும் ரசத்தை அரை லீட்டர் வீதம் இரண்டு மூன்று நாட்களுக்கு கொடுக்க வேண்டும்.

### ❋ அரசம் பட்டை:

அரசம் பட்டையை இடித்து சாறெடுத்து வாய் கொப்பளித்தால் வாயினுள் தோன்றக்கூடிய எவ்வகைப் புண்களையும் குணப்படுத்தும் விக்கல் அடங்கும், கபத்தையும் பித்தத்தையும் குறைக்கும்.

### ❋ இலந்தைப்பட்டை:

இலந்தைப் பட்டையை இடித்துத் தூள் செய்து அந்த தூளை ரணங்களின் மீது தூவி கட்டுப்போட்டு வந்தால் எவ்வளவு நாட்பட்ட ரணமாக இருந்தாலும் குணப்படுத்தும். பட்டையைக் கஷாயமாக்கி வாதநோயாளிகளை குடிக்கச் செய்தால் வாதம் தொடர்பாக தோன்றிய பல தொல்லைகள் நீங்கும். காய்ச்சல் விலகும்.

### ❋ நாவல் பட்டை:

நாவல் மரத்துப் பட்டையை இடித்து ரசம் எடுத்து எருமை மோரில் கலந்து சாப்பிட்டால் பெண்களின் பெரும்பாடு எனப்படும் அதிக ரத்தப்போக்கு குணப்படும். குழந்தைகளின் ஈளை இருமல் அகலும் பித்தக் கோளாறுகள் நிவரத்தியாகும்.

### ❋ புங்கம் வேர்:

புண்களில் புரையோடி ஆறாமல் தொல்லை கொடுக்கும் போது புங்கம் வேர் குணப்படுத்தும். மற்றும் வாதக் குடைச்சல், பாம்பு, விஷம், குன்மம் போன்ற கோளாறுகளுக்கு இதனைக் கஷாயம் செய்து உபயோகிக்க வேண்டும்.

### ❋ நல்ல முருங்கை வேர்:

நல்ல முருங்கை வேர் மட்டுமன்றி அதன் பட்டையும் நல்ல மருந்துப் பொருளாகும். இது சிறப்பாக மண்ணீரல், கல்லீரல் கோளாறுகள், முதுகுவலி கை, கால் வீக்கம் ஆகியவற்றை நன்றாக குணமாக்கும். ஜன்னி தோஷங்கள் பட்டால் வேர்ப்பட்டையுடன் கடுகு, வெள்ளைப்பூண்டு, ஓமம் சமமாக எடுத்து உரைத்து இருகால்களின் விரல்களில் பூசிவர குணம் தெரியும். பொதுவாக இது வாய்வையும் சீதளத்தையும் போக்கும்.

### ❋ வாழைக்கிழங்கு:

வாழைக் கிழங்கை எடுத்து நன்றாக அரைக்க வேண்டும், துணி சுட்டுக்கருக்கிய சாம்பல் இரண்டு வராகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடை எலுமிச்சங்காயளவு அரைத்த வாழைக்கிழங்கோடு சேர்த்து விளக்கெண்ணெயில் குழப்பி சாப்பிட்டால் நீர்குத்து, நீர்சுருக்கு, தொல்லைகள் உடனே அகலும், வாழைக்கிழங்குச் சாறோடு சீவியதேத்தான் கொட்டையைச் சேர்த்து அரைத்து வெல்லக்கட்டியொன்று கூட்டிச் சாப்பிட வெள்ளை தொடர்பான கோளாறுகள் குணமாகும்.

### ❋ சித்திர மூலவேர்:

சித்திரமூல வேரைச் சேகரித்துக் கட்டி, பாலில் பொட்டக் காய்ச்சி இரவில் குடித்துவர வாய்வுக் காரணமாக தோன்றும் எல்லா விதமான வலிகளையும் அகற்றும். குறிப்பாக கீழ்வாயு தொடர்பாக ஏற்படும் கடுமையான வலிமையான வலியை இது நிவர்த்திக்கும். இதனைச் சாப்பிடும் போது நல்லெண்ணெய், கடுகு போன்றவற்றை விலக்க வேண்டும். சீரகமும் நெய்யும் சேர்த்துக் கொள்ளலாம்.

### ❋ அகத்தி வேர்:

அகத்தி வேரை இரண்டொருநாள் நீரில் ஊறவைத்துப் பின் கஷாயம் செய்து சாப்பிட ஆண்குறியில் தோன்றும் எரிச்சல் அகலும். அதிதாகம், மேக நோய், கண், காது, மூக்கு வாயில் தோன்றும் எரிச்சல் ஆகியவையும் குணமாகும்.

### ❋ அவுரி வேர்:

வயிற்றில் தோன்றும் எந்த பிணிக்கும் இது நல்ல மருந்து. விஷக்கடி, மூச்சை, வெள்ளை விழுதல் போன்றவற்றை நல்ல முறையில் குணமாக்கும். கஷாய முறையில் இதனைப் பயன்படுத்த வேண்டும்.

### ❋ முடக்கற்றான் வேர்:

நாட்பட்ட இருமலும், மூலமும் முடக்கற்றான் வேரினால் சிறப்பாகக் குணமாகும். மற்றும் நோய்களையும் குணப்படுத்தும். இதனைத் தூள் செய்து உபயோகித்தல் வேண்டும்.

### ❋ நிலவாகை வேர்:

நிலவாகை வேர் பட்டையை தனியாக எடுத்து அத்துடன் எலுமிச்சம் பழச்சாறு விட்டரைக்க வேண்டும். அப்படி அரைக்கப்பட்ட மருந்து படை, பத்து, மூலவாயு, கிரந்தி குன்மம், மலச்சிக்கல் ஆகியவற்றுக்கு நல்லது.

❋

**மனத்திரை....**

காலதேவன்
தன்....
கண்களால்
எடுத்த
நினைவுப்படங்களை
ஓடவிடும்
இடம்!



–ஜி.மனோ–

**நன்றி : கனையாழி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்லத்தான் நினைக்கிறேன்

**6** – ப. மனோகரன் –



நவீன உலகத்தில் இளைஞர்கள் ஏதோ ஒரு விடயத்தில் சாதிக்க வேண்டுமென்ற இலட்சியத்தில் வாழ்கின்றார்கள். சிலர் சாதிக்க வேண்டுமென்ற கற்பனை வாழ்வில் மட்டும் வாழ்ந்துகொண்டு சாதிப்பதற்கான ஒரு சிறு முயற்சியைக் கூட கையாள்வதில்லை. இன்னும் சிலர் தானும் சாதிக்க வேண்டும் என்று நினைத்து அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு, முயற்சிகளினூடாக பல தோல்விகளை, தடைகளை சாதிப்பதன் விளைவாக தனது சாதனைப்பயணத்தை இடைநிறுத்திக்கொள்வார்கள். ஆனால் தன் நம்பிக்கை உள்ளவர்களோ தனக்கு ஒரு நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு தனது சாதனைப் பயணத்தை ஆரம்பித்து பல தோல்விகள், பல ஏமாற்றங்கள் என்பவற்றை சந்தித்து சலித்து விடாமல் தோல்விகளை வெற்றிப்படிகளாகக் கொண்டு தனது இலக்கை அடைவார்கள். ஒவ்வொருவருக்கும் ஒரு இலட்சியம் கட்டாயமாக இருக்க வேண்டும். அதேநேரத்தில் அந்த இலட்சியத்தை அடைவதற்கான முயற்சியையும் எடுக்க வேண்டும். நோக்கமின்றி செல்லும் பயணம் அர்த்தமற்றது.

இன்றைய காலகட்டத்தில் இளைஞர்கள் பல இன்னல்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றார்கள். ஒருவன் அவனது நோக்கத்தை அடைவதற்கான பாதையில் செல்லும் போது பல தோல்விகளை, தடைகளை சந்திக்கும் போது சோர்வடைகின்றான். அச்சந்தர்ப்பத்தில் நோக்கத்தை கைவிட்டு விடுகிறான். தோல்வி என்பது தான் முயற்சிக்கும் முயற்சியின் சிறு குறைபாடாகும். தோல்வி என்று கருதாமல் தனது முயற்சியின் சிறிய குறைபாடு என்று கருதி, அந்தக் குறைபாட்டை கண்டறிந்து அதைப் பூர்த்தி செய்து மீண்டும் முயற்சித்தால் வெற்றி எனும் கனியை இலகுவில் அடைந்து விடலாம்.

'நீர் சமாந்தரமான பகுதிகளில் செல்லும் போது அது நதியாகத்தான் ஓடும். ஆனால் அது மலைமேடுகளையும் பள்ளத்தாக்குகளையும் சந்திக்கும் போதுதான் நீர்வீழ்ச்சியாக உருவாகும். இதே போன்று நீயும் உனது இலட்சியத்தை அடைவதற்கான பாதையில் செல்லும் போது பல தோல்விகளை, தடைகளை சந்தித்து அவற்றை கடந்து செல்லும் போது, வெற்றி எனும் இலக்கை அடையலாம். அவ்வாறு அடையும் வெற்றி ஒரு மகத்தான ஒரு வெற்றியாக அமையும். இவ்வாறு சாதித்தவர்கள் உலகில் எத்தனையோ பேர்.. என்னால் முடியும். முடியும் என்று சிந்தித்துக்கொள்... கண்டிப்பாக ஒருநாள் நீ சாதிப்பாய். இதற்கு நமது சமுதாயத்தில் உள்ள சாதித்தவர்களை முன்னுதாரணமாக எடுத்துக்கொண்டு உன் இலக்கை நோக்கி செல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றி உனது கனவாக இருக்க வேண்டும். கனவு காணுங்கள் கனவை காணாமல் அதை நிறைவேற்றுங்கள். உனது பயணத்தில் நாளை என்று ஒன்றை மட்டும் நினைக்காதே. நாளை என்று ஒன்றை நம்பி இன்றைய நாளை இழக்காதே. இன்றே சிந்தித்து இன்றே நிறைவேற்று.

1. கடின உழைப்பு
2. முயற்சி
3. நோக்கம்
4. தன்நம்பிக்கை
5. நேர்மை
6. பொறுமை
7. விடாமுயற்சி

என்பவற்றை உனது சாதனைக்கு அடித்தளங்களாகக் கொண்டு, உனது பயணத்தை ஆரம்பி. வாழ்க்கை என்பது பல பாதைகளைக் கொண்டது. அதில் தடைகளைக் கண்டு உன் பாதை மாறாமல் தடைகளை தாண்டி உன்பாதையிலே செல். நீயும் சாதிப்பாய்.

இதயம் சொல்வதை செய் வெற்றியோ? தோல்வியோ? அதை தாங்கும் வலிமை அதற்குதான் உள்ளது. உலகிலேயே மிக அதிகமான கண்டுபிடிப்புகளுக்கு வர்த்தக உரிமை எடுத்தவர் தோமஸ் அல்வா எடிசன். ஒன்றல்ல, இரண்டல்ல, 1093 கண்டு பிடிப்புகள் இவரால் கண்டுபிடிக்கப்பட்டவை. ஒருமுறை தனது உதவியாளர்களுடன் 17,000 விதமான செடிகளை பரிசோதனை செய்து பார்த்தார். எதிலிருந்து லேடக்ஸ் என்ற பொருளை பிரித்தெடுக்க முடியும் என்று அறிவதற்காக! 17000 தோல்விகள்! பின்னரே வெற்றி!

அவரது தோல்விகளின் எண்ணிக்கையைக் கண்டு பிரமித்து போனார் அவரது உதவியாளர். சுமார் 50,000 தோல்விகள்! பரிசோதனை செய்தவாறே இருந்தார். ஒரு சேமிப்பு மின்கலத்தைக் கண்டுபிடிப்பதற்காக! முடிவுகளாக 50,000 முடிவுகள் எனக்கு தெரியும். எதெல்லாம் சேமிப்பு மின்கலம் அமைக்க உதவாது என்று! ஆனால் 50,000 முடிவுகளைக் கண்டு பிடித்துள்ளேன் என்றார் அவர். என்ன தீவிர முயற்சியும் நெஞ்சுரமும் இருந்தால் இப்படி சொல்லி இருப்பார் . தோல்வி என்பதற்கு அவர் அகராதியில் அர்த்தமே வேறாக இருந்தது. தோல்வி என்பதை அவர் ஏற்கவேயில்லை

**தோல்வி என்றால் என்ன?**

1. தோற்பது என்பது தோல்வியாளனாக முத்திரை குத்தப்படுவதற்காக அல்ல.
2. தோல்வியிலிருந்து படிப்பினை பெற்றவுடன் தோல்விகளை மறந்து விடுங்கள்.
3. விடாது முயற்சி செய்து கொண்டிருக்கும் வரை நீங்கள் தோற்றவனாக ஆகமுடியாது.
4. நீங்களாக ஒப்புக் கொண்டால் ஒழிய தோல்வி என்பது முடிவானதாக ஆகிவிடாது.
5. முயற்சியை அறவே விட்டுவிட்டு களத்திலிருந்து ஒதுங்கிய விடும் வரை நீங்கள் தோல்வியாளன் இல்லை.

இந்த ஐந்து கருத்துக்கள் தோல்வி என்றால் என்ன என்பதை நமக்கு புலப்படுத்தும்.

சராசரி விதி என்று ஒரு விதி உண்டு. அதிக முயற்சி செய்தால் அதிகப் பயன் கிடைக்கும் என்பதே இதன் சாரம்சம். ஒரு குறிக்கோளை நோக்கிச் செல்லும் போது – அதிக முயற்சிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும்போது ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் வெற்றி நிச்சயம் கிடைக்கும் இந்த வெற்றி விகிதத்தை அதிகரிக்க வேண்டுமென்றால் மேலும் அதிகமுறை முயற்சிகள் எடுக்க வேண்டும் என்பதே படிப்பினை. இதைத்தான் எடிஸன் கடைப்பிடித்தார். வெற்றி பெற்றார்.

தோல்வி, நிராகரிப்பு, விமர்சனம் இவை எல்லாம் அவமானத்தின் சின்னம் அல்ல, நல்ல அனுபவங்கள் அவை. அவ்வளவுதான். ஒருவன் சிறந்த அனுபவஸ்தன் என்றால் என்ன அர்த்தம் அவன் வாழ்க்கையில் பல தோல்விகளை சந்தித்து, சமாளித்து முன்னேறி இருக்கிறான் என்று தான் அர்த்தம்.

அழகான பழமொழி ஒன்று உண்டு. தோல்வி என்பது உங்களை அழுத்தும் சுமையாகவும் இருக்கலாம். அல்லது உங்களை விண்ணிலே ஏறிச் செல்லும் இறக்கைகளாகவும் இருக்கலாம். தோல்வி நம்மை அழிக்கவும் முடியும் அல்லது வலுவானவனாக தம்மை ஆக்கவும் முடியும். அது நம்மை பொறுத்ததே. அயல் நாட்டு மொழிகளைக் கற்பது போலத்தான் நமது தோல்விகள். எப்படி புதுமொழி மற்றைய மனிதரிடம் எண்ணப் பரிமாற்றம் மூலம் தொடர்பு கொள்ள உதவுகிறதோ அதுபோல பலருடன் அது தொடர்பு கொள்ள உதவுகிறது.

**தினசரி 10 தவறுகள்**

தவறு செய்து விட்டோமே, தோல்வி அடைந்து விட்டோமே என்று தன்னிரக்கப்படக்கூடாது. தவறு இழைப்பது மனித சுபாவம். ஆனால் செய்த தவற்றையே மீண்டும் செய்வதுதான் கூடாது. தோல்வி அடைவது இயல்பு; ஆனால் புத்திசாலித்தனமான தோல்வி வெற்றிக்கு வழி வகுக்கும் (அதாவது தோல்வியிலிருந்து படிப்பினை பெற்று விட்டால்) என்பது உண்மை. நெப்போலியன் ஒரு முறை கூறினான். 'ஐரோப்பாவிலேயே சிறந்த படைத்தலைவன் நான்தான் என்றாலும் ஒரு நாளைக்கு பத்து தவறுகள் செய்கிறேன் நான்! பத்து! என்று உரத்துக் கூறிய அவன் தன் இரு கைவிரல்களையும் தலைக்கு மேலே உயர்த்திக் காண்பித்தான். ❋

*************

தொடரும்....

❋ **சமிபாட்டுக் கோளாறாக இருக்கின்றது. நெஞ்சு எரிகின்றது. இதை தவிர்க்க என்ன செய்யலாம்?**

மதுப்பழக்கம், சிகரெட் குடிக்கும் பழக்கம் இருந்தால் நிறுத்தி விட வேண்டும். மாமிச உணவை தவிர்த்து மரக்கறி உணவை சாப்பிடலாம். நிறைய காய்கறி, பழங்கள் மற்றும் தானியங்களை சேர்த்துக் கொள்ளுங்கள். உணவின் அளவை அதிகரிப்பதைவிட, சிறிதளவேயானாலும் சத்துள்ள உணவுவகைகளைச் சாப்பிட்டு, அது சமிபாடாகும்படி பார்த்தக்கொள்ளுங்கள். உடற்பயிற்சி மேற்கொள்வது நல்லது. எண்ணெய் மற்றும் கொழுப்புள்ள பொருட்கள் சமிபாடடைவதைத் தூண்டாது. இவற்றைத் தவிர்த்து விடலாம். பழைய உணவுகளை தவிர்த்து விடுங்கள். குடல் அழற்சி ஏதேனும் உள்ளதா என்பதை மருத்துவப் பரிசோதனை மூலம் கண்டறிந்து கொள்ளுங்கள். ❋



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழின் முதல் மூன்று நாவல்கள்

- சி.சு.செல்லப்பா - - ஒரு பார்வை -

தற்கால தமிழ் இலக்கிய துறையில் நாவல் என்கிற மேல்நாட்டு உருவத்தின் பாணியில் சென்ற நூற்றாண்டின் கடைசி கால் பகுதியில் வெளிவந்த முதல் மூன்று நாவல்களான 'பிரதான முதலியார் சரித்திரம்' (தஞ்சை ஜில்லா மாயூரம் வேதநாயகம்பிள்ளை), 'கமலாம்பாள் சரித்திரம்' (மதுரை ஜில்லா வத்தலக்குண்டு பி.ஆர்.ராஜம் அய்யர்), 'பத்மாவதி சரித்திரம்' (திருநெல்வேலி ஜில்லா பெருங்குளம் அ.மாதவையா) ஆகியவை. இந்த மூன்று நாவல்களையும் முன்பே படித்திருந்தாலும் கூட, இப்போது சேர்த்தப் பார்த்து கணிக்க முற்படுகின்ற போது அவற்றின் உருவம், உள்ளடக்கம், உத்திமொழி நடை, பகைப்புலம், சூழ்நிலை, வர்ணனை, தோரணை முதலிய அம்சங்களில் அவை தனித்தனி விதமானவை.

இவை மூன்றும் ''குடும்ப நாவல்'' என்ற இனத்தில் அமைந்தவை. அதாவது இரண்டு சமூக குடும்பங்களின் பின்னணியில் அவரவரது பழக்கம், வழக்கம், மனோபாவம், பிரச்சனைகள், சிக்கல்கள், மனப்போராட்டங்கள், மோதல், உறவு முறைகள்,அ லட்சியங்கள், மதிப்பீடுகள் நம்பிக்கை, வாழ்க்கைப் பார்வை, உயர்நிலை எய்தல், சறுக்கி விழுதல், சமாளித்தல், மீறி எழுதல், திருந்துதல், தம் ஆளுமையைக் காப்பாற்றிக் கொள்ளுதல் முதலிய பண்புகளும் செவ்வனே கையாளப்பட்டிருக்கும் 'சமூக நாவல்கள்' என்றும் குறிப்பிடத்தக்கவை. அவர்களது வரிகளிலிருந்தே அந்த நாவல்கள் சம்பந்தமான அவர்களது உத்தேசங்களை அறியலாம்.

'ஏற்கனவே வெளிவந்த எனது நீதி நூல்களில் நான் குறிப்பிட்டிருக்கும் அறநெறிக் கொள்கைகளுக்கு உதாரணங்கள் காட்டவும் இந்த நவீனத்தை எழுதினேன் என்று வேதநாயகம்பிள்ளை எழுதியிருக்கிறார். அதை சிறப்பாக இதில் சித்தரித்த வெற்றி பெற்றிருக்கிறார். இது ஒழுக்க தத்துவ 'மதிப்பு' நோக்கு என்று இடம் தரவேண்டியதாகும்.

ராஜம் அய்யர் எழுதி இருக்கிறார்: 'இச்சரித்திரம் எழுதுவதில் எனக்கு கதையே முக்கிய கருத்தன்று. இவ்வுலகில் உழன்று தவிக்கும் அமைதியற்ற ஆத்மா, பல கஷ்ட நஷ்டங்களை அனுபவித்து கடைசியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்மலமான ஒரு இன்பநிலை அடைந்ததை விவரிப்பதே இந்நவீனத்தின் முக்கிய நோக்கம்.' இந்த மதிப்பு உத்தேசத்தை சாதிப்பதில் ராஜம் அய்யர் சாதனை காட்டியிருக்கிறார். இது 'தத்துவ நாவல்' என்று பெயருக்குரியதாகும்.

மாதவையா சொல்லி இருப்பது இது: 'இவற்றைப் படித்து இவற்றின் உட்கிடைகைகளைப் பற்றி ஊன்றி நினைத்துப் பார்த்து, முடிவான தீர்மானங்கள் செய்வது' நமது சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாததாகும். இவற்றை படிப்பவர்கள் ஒரு சிலரேனும் இவ்வழக்கங்களைப் பற்றி ஆழ்ந்து ஆலோசனை செய்வாராயின் அதுவே என் சிரமத்துக்குக் கைமாறு ஆகும். இந்த உத்தேசம் சமூகவியல் பார்வை மாதவையா தன் உத்தேசத்தை இந்த நாவலில் சரியாக நிறைவேற்றி இருக்கிறார்.

ஆகவே முதல் மூன்று நாவல் ஆசிரியர்களின் மூன்றுவித படைப்புக் கொள்கைகளை நாம் அறிகிறோம்.

எந்த ஒருகதாசிரியனும் தன் உடனிகழ் காலத்துப் பின்தளம், சுற்றுச்சூழல், மனோபாவம், பிரச்சனைகள், மன மோதல்கள், மதிப்பீடுகளில் வைத்துள்ள நம்பிக்கை, வாழ்க்கை முறை, பண்பாடு முதலியவற்ரற வைத்து நம்பிக்கை, வாழ்க்கை முறை பண்பாடு முதலியவற்றை வைத்து அவற்றின் குறைநிறைகளை, சாதக, பாதக விளைவுகளைக் கண்டு அவற்றின் பயன், பனனின்மை இவற்றை தன் பார்வையில் வெளிப்படுத்தி, மாதவையா சொல்வது போல, வாசகர்களை ஆழ்ந்து ஆலோசனை செய்யச் செய்து தனி மனித சமூக நம்பிக்கையை,

### புத்தகத்திலிருந்து

கோர்ட்டில் நடக்கிற விவகாரங்களைக் கேட்டு விவேகம் அடைவதற்காகவே ஜனங்கள் கோர்ட்டுகளுக்குப் போகிறார்கள். அவர்களுடைய முகத்திலே கரியைத் தடவுவது போல அவர்களுக்குத் தெரியாத பாஷையில் விவகாரம் நடந்தால் அவர்களுக்கு என்ன ஞானம் உண்டாகக் கூடும்? குருடன் கூத்துப் பார்க்கப்போனது போலவும் செவிடன் பாட்டுக் கேட்கப் போனது போலவும் இருக்கும்.



பிரதாப முதலியார் சரித்திரம் – மாயூரம் வேதநாயகம் பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லட்சியங்களை தங்களுக்குள் மேம்பட்டதாக உருவாக்கிக் கொள்ள வேண்டும். என்பதுதான்.

இந்த வித படைப்பு நோக்கு இந்த மூன்று நாவல்களிலும் தெளிவாக சித்தரிக்கப் பட்டிருக்கிறது. பிரதாப முதலியார் நாவலில் வரும் முதன்மை கதாபாத்திரங்களான பிரதாப முதலியார், அவரது மனைவி ஞானாம்பாள் இருவரும் தங்கள் மணத்துக்கு முன்னும் பின்னும் நெருக்கடியான சந்தர்ப்பங்களில் கஷ்டங்களை அனுபவித்தும், மனம் கலங்காமல் எதிர்நீச்சல் போட்டு சமாளித்து சோதனைகளில் தேறி நற்பண்புகளைக் கடைப்பிடித்து தங்களை உயர்த்திக்கொண்டு இன்பநிலை பெறுகிறார்கள். கமலாம்பாள் நாவலின் முதன்மை கதாபாத்திரங்களான கமலாம்பாள், முத்துச்சாமி அய்யர் இருவருக்கும் வாழ்வில் ஏற்பட்ட சோதனை, பிரதாப முதலியாருக்கும் ஞானாம்பாலுக்கும் ஏற்பட்டதைவிட பல மடங்கு கடுமையானது. அவர்கள் வாழ்வில் அடுத்தடுத்து விளைந்த விபரீத சம்பவங்கள் அவர்களை அதிர்ச்சி அடைய செய்து. மன முறிவு ஏற்பட்டு அவர்களது வாழ்வு விநாசத்துக்கு உள்ளாகிவிடக்கூடும் என்ற நிலைக்கு வந்து விட, தங்கள் ஆன்மிக குணாம்சத்தால் தங்களை காப்பாற்றிக் கொண்டு வருகிறார்கள். சுபமுடிவு ஏற்படுகிறது. பத்மாவதி நாவலின் முக்கிய கதாநாயகர்களான நாராயணன், கல்யாணி, பத்மாவதி, கோபாலய்யர் ஆகிய இருதம்பதிகளின் வாழ்வில் ஏற்படும் சிக்கல்கள் சந்தர்ப்பத்தால் தீவிரமாகி உறவு அமைதி குலைந்துவிட, அவதிப்பட்டு தம்மன உளைச்சல்களில் உழன்று இறுதியில் சவுஜன்யமான

### புத்தகத்திலிருந்து

இப்படித்தான் மனிதனும் பிறந்து சிரித்து, அழுது சண்டை போட்டு கடைசியில் அமர்கிறது. 'இங்கே ஒரு ஆள இருந்தானே என்டாமிச்சம் என்றால் ஒரு பிடி சாம்பல். அதையும் காற்று வாரிக்கொண்டு போய் விடுகிறது. "ஏனடா இந்த விருதாச் சண்டை, இதில் உனக்கென்ன மிஞ்சுவது, அவர் ஒருவர்தான், போய் அவரைத்தேடு" என்று இந்த சமுத்திரம் சொல்லுகிறாற் போலிருக்கிறது' என்றாள் லட்சுமி.

கமலாம்பாள் சரித்திரம்



கமலாம்பாள் சரித்திரம் பி.ஆர்.ராஜம் அய்யர், பி.ஏ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவை திரும்பப் பெறுகிறார்கள்.

இந்த மூன்றும் சுபமுடிவுக் கதைகள். சோக சூழ்நிலைகளில் உழன்றும் சோக முடிவுகள் செய்யப்படவில்லை. நமது புராண கால மரபை ஒட்டிய பார்வை, உத்தேசம் கொள்ளப்பட்டிருக் கிறது. வாழ்க்கையில் என்ன நேர்ந்தாலும் எல்லாம் நமது நன்மைக்கே: நன்மையாகவே முடியும் என உணர்வு வேண்டும் என்பதை படிப்பினையாகக் கொண்ட நாவல்கள் இவை மூன்றும்.

இந்த மூன்று நாவல்களின் உருவகங்களும் அநேகமாக ஒரே விதம்தான். மூவருமே 'சரித்திரம்' என்ற சொல்லை உபயோகித் திருப்பதே சுட்டுச் சொல்லாக இருக்கிறது. ஒரே வித அமைப்பாக, உத்தி கொண்டதாக இறுதிவரை அமைந்திருக்கிறது. மூவருமே பிரிட்டிஷ் தேசத்தின் நாவல் இலக்கியத் துறையோடு பயிற்சி உள்ளவர்கள். எனவே அந்த நாவல் இலக்கியத் துறையின் ஆரம்பகால பாணியை பின்பற்றி இருப்பதை உணர முடிகிறது. ஒரு குடும்பத்தின் வரலாற்றுத் தகவலுடன் ஆரம்பிக்கிறது 'பிரதாப முதலியார்' நாவல். ஆனாலும் நாவலின் உத்தி சுயசரிதை பாணியாக, 'சத்தியபுரி என்னும் ஊரிலே தொண்டை மண்டல முதலியார் குலத்திலே நான் பிறந்தேன். என்று நான் பாணியில் பிதம கதாபாத்திரம் கதை சொல்வதாக அமைந்திருக்கிறது. இது புது உத்திதான் கமலாம்பாள் ஆரம்பம். மூன்றாம், மனித கதைசொல்லியின் வெளியீட்டு வழியாக 'ஒரே ஒரு ஊரில் ஒரே ஒரு ராஜா' என்ற பாணியில் ஆரம்பித்தும், 'பிரதாப முதலியார்' ஆரம்பம் போல குடும்ப வரலாற்றை அடுக்காமல் ஒரு குடும்பத்து கணவன்-மனைவி சம்பாஷணையுடன் திடுதிப்பென ஆரம்பிக்கிறது. இந்த உத்தியும் புதிதானதுதான். 'பத்மாவதி'யோ பிரதாப முதலியார் உத்தி வழியில் குடும்ப வரலாற்று வழியில் ஆரம்பித்து மூன்றாம் மனித வெளியீட்டு கதை சொல்லல் பாங்காக அமைந்தி ருக்கிறது. மொத்தத்தில் சொல்வதானால் அநேகமாக, நாவல் துறையை துவக்கிவைத்த மூவரும், இன்றைய பார்வை யிலிருந்து பார்ப்பவர்களுக்கு மரபு வழியான உத்திப் பாங்கு என்றுதான் சொல்லத்தோன்றும். ஆமாம், மரபுவழிதான், நாவல் இலக்கியமே நமக்கு புதுமையாக ஆரம்பிக்கப்பட்டிருக்கிற போது, அன்று அது மரபுதான் அன்றைக்கு அந்த உத்தியும் புதிதுதான். இன்று வேறு புது உத்திக் கொள்கைகள் கையாளப்பட்டு இவை பழைய மரபாகி விட்டன. இது எந்த ஒரு காலத்து புது மரபுக்கும் ஏற்படுவது இயல்புதான். எனவே அந்த காலக்கட்டத்தை வைத்துத் தான் நாம் கணிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். முன் தலைமுறை காட்டிய வழியாக, காலத்துக்கு ஏற்ப நாவல் விஷயம் மாறுகிற போது உருவமும் உத்தியும் மாறுவதும் ஒத்துத்தான் இருக்கும். மூவரது மொழிநடைகளிலும் வித்தியாசம் இருப்பதைக் கவனிக்கலாம். ராஜம் அய்யரது நடை காவிய பாணி நடை (கிளாஸிகல்) வேதநாயகம்பிள்ளை நடை தம் உரைநடை ஆரம்ப பாணியான நாட்டுப் புற இலக்கிய கதைப்படைப்புகளின் பாணி ஏறியநடை. மாதவையாவினது தற்கால பேச்சுப் பாங்கான நடையும் கலந்ததாகும். கதை விஷயத்துக்கு ஏற்ப வாய்ந்த நடைகள். பிராந்திய நடைகள் என்றும் சொல்லலாம்.

இதில் முக்கியமான விஷயம் மூன்றிலும் முறையே நெறி, ஆன்மீகம், சமூகம் சம்பந்தப்பட்ட கருத்துக்கள் அள்ளி இறைக்கப்பட்டிருப்பதை கவனிக்கலாம். நாவலின் நடு நடுவே ஆசிரியர் கூற்றாக தம் கருத்துக்களை அப்பட்டமாகக்கூட சொற்பொழிவுகள் போல், கட்டுரைகள் போல், சிந்தனைகள் போல் வியாக்கியானம் செய்திருப்பதை உணரலாம். இதனால் நாவலின் சரளமான கதையோட்டம் அங்கங்கே தளர்ந்திருப்பதையும் உணரலாம்.

மூன்றும் யதார்த்த, நடப்பியல் (ரியலிஸ) பாணிகள் தான். ஆனாலும் பிரதாப முதலியார், கமலாம்பாள் இரண்டிலும் அசாதாரணமான வெகுவான சம்பவங்கள் காண்கின்றன. ஞானாம்பாலுக்கு யானை மாலை போட்டு அவள் ஆண் வேடத்தில் ஒரு நாட்டின் அரசியாவதும், முத்துச்சாமி அய்யருக்கு விஸ்வரூப தரிசன

### புத்தகத்திலிருந்து

நண்பரே, ஒரு நிமிஷமாவது பிறவித் துன்பங்களை மறந்து தேகபரவசமாகி, நிஷ்களங்கமான சந்தோஷத்தை அனுபவிக்க நீர் விரும்பினால் உடனே திருக்குற்றாலஞ் சென்று அவ்வருவிக் காட்சியைக் கண்படைத்த செல்வமென் நோக்கும். அப்போதும் உம் மனக்கவலை மாறாவிடின் பொங்குமாங் கடலினிற்றும் அருவியுடன் தலைகீழாகத் துள்ளி விழுந்து உயிரை விடுதலே உத்தமம்.




பத்மாவதி சரித்திரம்
–அ.மாதவையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றம் ஏற்பட்டு அவருக்கு ஞானோதயம் ஏற்பட்டதும் மிகுதியில் (ரெமாண்டிக்) பாங்காக இருக்கின்றன. ஆனாலும் நாவலுக்கு அந்த சம்பவங்கள் இசைவாகவும் நயம், பொருள்கனம் ஏற்றுவதாகவும் இருக்கின்றனவே தவிர, அசம்பாவித மானவையாகப்படவில்லை.

முடிவாக, இந்த மூன்று முதல் நாவல்களும் தமிழ் நாவல் துறைக்கு நல்ல அஸ்திவாரம் போட்டவை, வழிகாட்டியவை என்று சொல்லலாம். மூன்றும் லட்சிய மதிப்பு நாவல்கள்.

நூற்றாண்டு காலமாக தமிழில் வளர்த்திருக்கும் நாவல் துறை இவற்றின் அடிப்படையில் தான் பிறந்து வந்திருக்கின்றன. தற்போதைய புதிய தலைமுறையினர் இவற்றை பரிச்சயம் செய்துகொண்டு தம் படைப்புகளை உடனிகழ் காலத்துக்கு ஏற்ப உருவாக்கிக் கொள்ள ஏதுவாக இந்த முதல் நாவல்களின் மறுபிரசுரம் பயன்படக் கூடும் என்று கருதுகிறேன்.

நன்றி: இந்தியா டுடே

❋

வயோதிகமும் மரணமும் மனிதனுடைய ஆயுளை ஒவ்வொரு நாளும் அழிவை நோக்கியே ஓட்டிச் செல்கின்றன.

-தம்ம பதம்-

## கல்லாகியும் நிற்பேன்......!

உதிர்த்துவிடு
இன்னும் உன் இதயத்தில்
இரக்கம் இருந்தால்..

கண்களுக்குள்
கண்காணாத முடுபிரதேசத்துள்
எங்கேனும்
ஒரு துளி நீர் இருந்தால்
அத்தனையையும்
இன்றோடே இறக்கி விடு....

நாளை இருக்கும்
ஆனால்
நாம் தொலைந்து போயிருப்போம்

சேர்ந்து வாழ்ந்தோம்
என்பதற்கான தடயங்கள் எங்காவது
தட்டுப்படலாம்

மலையின் உச்சி
சிரித்தபடி எடுத்த புகைப்படம்
ஒன்றாய்
உலவிய பிரதேசத்தின்
ஒற்றையடிப் பதை என
ஏதாவது ஒன்று எமது
நினைவைச் சுரண்டலாம்



அத்தனையையும் சேர்த்து
அழித்துவிடு

தாஜ்மஹால்
தகர்த்து விட்டாலும் கூட
காணாமல் போய்விடாத காதல் போல
சிலைக்குள் ஒளிந்திருக்கும்
கல்
நாளாகி நிற்பேன்...!

❋ மட்டுவில் ஞானக்குமாரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எச்சில் தட்டு......

-திருமலை சுந்தா -

கணவன் சாப்பிட்டு முடிந்த பின் எச்சில் தட்டினை நீட்டினான்.

மனைவி அதனை பக்குவமாக வாங்கி தான் சாப்பாடு சாப்பிடுவதற்காக அந்த எச்சில் தட்டினில் சாதத்தை வைத்தாள். கறி, கழம்பினை ஊற்றினாள். பிசைந்து பிசைந்து சாப்பிட தொடங்கினாள்.

கணவன் மனைவி அவர்களின் திருமண பந்த இறுக்கத்தின் சுகத்தினை நான் அந்த தெருவோரத்தில் நின்று அனுபவித்துக் கொண்டிருந்தேன்.

கணவன் சாப்பிட்ட தட்டை.... அது அது அவர்களுக்காக என பிரித்து வாழும் நாகரிக சமூகத்தில் இக்காட்சி என்னை பிரமிக்க வைத்தது.

அந்த கணவன் கொடுத்து வைத்தவன். அவன்தான் ஆண்மகன். அக்காட்சி என்னை மீண்டும் மீண்டும் தலை குனிய வைத்தது.

ஏற வேண்டிய பஸ்சை மறந்து விட்டு அந்த ஆண்மகனையே கண் வெட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தேன்.

'என்ன என்னையே பார்த்துக் கொண்டு இருக்கிறீங்க.....' அவன் கண்களால் என்னைக் கேட்டான்.

'இங்கே வா ஒருக்கால்..' நான் தலையால் பதில் சொன்னேன்.

அவன் கையில் இருந்த துவாயை உதறிவிட்டு என்னிடம் வந்தான்.

'ஏதும் வேலை இருக்கா....? அவன் என்னிடம் கேட்டான்... நான் தலையாட்டி விட்டு 'நீ கொடுத்து வைத்தனி... நீ சாப்பிட்ட சாப்பாட்டு தட்டிலே உன் மனைவி சாப்பிடுறாளே.....' நான் கண்களால் சிரித்தேன்.



அவன் என்னை அதிசயமாக பார்த்தான்.

'இதில என்ன.....'

அவன் அலட்சியமாக பதில் தந்தான்

அவனின் பார்வை.... அதில் இருந்த அலட்சியம்....

என்னை வேலைக்கு கூப்பிடுவீங்க என்று பார்த்தால் நீங்க' என்ற புறு புறுப்பு...

'இல்ல... நீ சாப்பிட்ட எச்சில் தட்டில உன் மனைவி....' நான் சொற்களால் தடுமாறினேன்.'

'சும்மாபோங்க நீங்களும் உங்கள் கதையும் இரண்டு கோப்பைகளை கழுவ வேண்டுமே என்ற பஞ்சியில தான் அவ என் தட்டில சாப்பிடுறா... நீங்க....'

அவன் அலட்சியமாக சொல்லி விட்டு இடுப்பில் இருந்த பீடியை பற்றவைக்க எடுத்தான்.

நான்....

என் மனம்....

பற்றவா தொடங்கி விட்டது.....?

* (கற்பனையா..?)

-2-5-2002-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org